Erode-Karur Road

* 391 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை ஜில்லா ஈரோட்டிலிருந்து கரூர் போகும் பாட்டையில் 21/1 மைலில் வெங்கம்பூர் ரயில்வே பாலத்துக்கடியில் போகும் மேற்படி பாட்டையை 21/2-ல் ரயில்வே லயன் மேல் மாற்றி, மேற்படி பாட்டையை மாற்றும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

(இ) அப்படியாயின் வேலை எப்போது ஆரம்பமாகும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The work has been approved by the Government and it will be taken up for execution after the detailed estimate is technically sanctioned.

SRI K. R. NALLASIVAM : சுமார் எத்தனை நாட்களில் வேலை எடுத்துக்கொள்ளப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : *1961-62*-ல் இந்த வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

Rents (lands)

* 392 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether this Government have received any communication from the Centre about the recommendations of the Land Reforms Committee regarding the reduction of rents of the tenants, prevention of binami transfer of lands by the landlords during 1960; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The Panel on Land Reforms, Planning Commission, has not yet finalized its recommendations.

SRI N. K. PALANISAMI : மத்திய சர்க்காரிடமிருந்து இந்த சர்க்காருக்கு உச்ச வரம்பு சம்பந்தமாக நிலச் சீர்திருத்தக் குழுவினுடைய ஆலோசனைகள் வந்தனவா ? அல்லது, ஏதாவது தகவல்கள் வந்தனவா ? அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைப்பற்றி ஆலோசிக்க நம் அரசாங்கம் சார்பாக ரெவினியூ போர்டு மெம்பர் ஒருவர் போய்க் கலந்துகொண்டார். அவர்கள் எல்லோரும் அதை அலசிப் பார்த்திருக்கிறார்கள். முடிவாக என்ன சிபார்சு செய்திருக்கிறார்கள் என்று இன்னும் தெரியவில்லை.

22nd February 1961]

SRI N. K. PALANISAMI : 1960-ம் வருஷத்தில் உச்ச வரம்பு மசோதா பிரசுரமான பிறகுதான் பினாமி ட்ரான்ஸாக்ஷன் தடை செய்யப்பட்டிருகிறது. ஆனால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையான கொள்கையை எடுத்துக் கொண்டாலும் சரி, நிலச் சீர்திருத்தக் குழுவினுடைய சிபார்சை எடுத்துக்கொண்டாலும் சரி, இந்தச் சர்க்கார் நிலச் சீர்திருத்த மசோதா கொண்டுவருவதற்கு முன்பாகவுள்ள பினாமி ட்ரான்ஸாக்ஷன்களைத் தடை செய்யவேண்டுமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க, 1958-ம் வருஷத்திலிருந்து நடந்த பினாமி ட்ரான்ஸாக்ஷன்களைத் தடை செய்ய சர்க்கார் ஏன் முயற்சி செய்ய வில்லை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் 'பேனல்' அதைப்பற்றியும் யோசனை செய்தது. அவர்களுடைய முடிவான அபிப்பிராயம் இன்னும் வரவில்லை.

SRI S. M. ANNAMALAI : நிலம் சம்பந்தமான சட்டங்கள் நம்முடைய மாநிலத்தில் இருந்தபோதிலும், அந்தச் சட்டங்கள் சரியாக அமுலாக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதுபோலவே நிலத்திற்கு உச்ச வரம்பு விதித்து மசோதா வருகிறது என்ற காரணத்தால் முன்கூட்டியே நிலங்கள் பினாமி முறையில் எழுதி வைக்கப்பட்டுவிட்டனவே, அதைக் குறித்து மத்திய சர்க்கார் விசாரணைக் கமிட்டி ஏதாவது இந்த சர்க்காருக்குச் சொல்லியிருக்கிறதா ? அப்படியாயின், ஏன் இந்தச் சர்க்கார் ஒரு தனிக் கமிட்டியை நியமித்து எந்த எந்த ஆண்டுகளில் எவ்வளவு எவ்வளவு நிலங்கள் பினாமி முறையில் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்கக் கூடாது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நில உச்ச வரம்பு மசோதா எப்பொழுது பிரசுரமாயிற்றோ அதற்குப் பிறகு ஏதாவது பினாமி ட்ரான்ஸாக்ஷன் நடந்திருந்தால், அதை விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு முன்னால் ஏதாவது நடந்திருந்தால் இந்த மசோதாவுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

Houses for Harijans

* 393 *Q.*—SRI P. S. CHINNADURAI (os behalf of SRI T. S. RAMASWAMI) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of houses built last year in each district with the Government aid for Harijans; and

(*b*) whether Harijan converts are given any aid for building houses for dwelling purposes; if not, why?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Chingleput—380;
Coimbatore—438;
Kanyakumari—100;
North Arcot—262;